[26th March 1964

கொஞ்சம் தாமதம் இருக்கலாம். அப்படியிருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

Children of defence personnel

* 417 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government havse arranged to give special consideration in the case of appointments and promotions to the children of the ex-defence personnel and serving defence personnel in view of their meritorious services and sacrifice for the country?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நாட்டுக்காக உயிர் துறக்கும் மிலிடரி பர்சானலுடைய குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல சலுகைகள் இக்குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன.

செய்தித்துறை அலுவலகம், திருச்சிராப்பள்ளி

* 418 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் " செய்தித்துறை " அலுவலகம் ஒன்று திறக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எப்போது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) அரசாங்கம் ஏற்கனவே ஒரு செய்தித் துறை அலுவலகத்தை திருச்சிராப்பள்ளியில் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 28-ந் தேதியில் ஆரம்பித்திருக்கிறது.

மாவட்ட ரஸ்தா போக்குவரத்து அபிவிருத்திக் கமிட்டி

* 419 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ரஸ்தா போக்குவரத்து அபிவிருத்தி திட்டக் கமிட்டி அமைக்க சர்க்கார் மாவட்டத் தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எத்தனை மாவட்டங்களில் மேற் சொன்ன கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The District Road Development and Traffic Planning Committee has been formed in all the districts in this State.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

26th March 1964]

திரு. ம. கமலநாதன் : இந்தக் கமிட்டியினுடைய வேலைகள் என்னென்ன என்று வரையறுக்கப்பட்டுள்ளனவா ? அப்படி யென்றால் அவையெவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக டிராபிக் சம்பந்தமான பிரச்னைகளை யெல்லாம் விவாதிக்கலாமென்று கொடுத்திருக்கிறோம். ஆனால் இது சம்பந்தமான பிரச்னைகளை கனம் அங்கத்தினர்கள் எழுதியனுப்பி அந்தக் கமிட்டியிலே விவாதிக்கலாம்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் யார் யார் நியமிக்கிறார்கள், யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்று அறியலாமா ? 9–30 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜில்லாவைப் பொறுத்த மட்டில், ஜில்லா கலெக்டர் நியமிக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி ஒவ்வொரு மாதமும் கூடவேண்டும் என்று இருக்கிறதா அல்லது தேவைப்படும்போது மட்டும் கூடலாம் என்ற நியதி இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேவைப்படும் போது கூடும்.

திரு. வை. சங்கரன் : சார், எந்த அடிப்படையில் இந்தக் கமிட்டிக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று மாவட்டத் தலைவருக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Superintendent of Police in the district, the Divisional Engineer or Engineers (Highways) in the district, the Regional Transport Officer, the Commissioner of the Municipality at the District Headquarters, three members from the District Development Council (or if there are two councils in the Revenue district, three members from each such council). Among the three, one shall be the Chairman of the Works Committee and one shall be a Member of the State Legislature, and a representative of the District Motor Transport Industry nominated by the Collector and approved by the Transport Commissioner.

திரு. பீ. கலியாணசுந்தரம் : ஸார், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. இந்தப் பணிகள் சட்டப்படி மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் விவாதிக்க வேண்டிய பணிகள். அதைப் புறக்கணித்து விட்டு தனிப்பட்ட கமிட்டியை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கவனிக்கவேண்டியது ட்ராபிக் ப்ராப்ளம் என்ன, எங்கெங்கே ஒன்வே ட்ராபிக் கொடுக்க வேண்டும், ஒன்வே ட்ராபிக்காக இருக்கவேண்டுமா அல்லது ரெஸ்ட்ரிக்டட் ட்ராபிக்காக இருக்க வேண்டுமா என்பவை போன்ற பிரச்னைகள் : இவற்றைத் தனியாக விவாதிப்பதுதான் சௌகரியம்.

[26th March 1964

திருமதி டி. என். அனந்தநாயகி : சார், இந்தக் கமிட்டி வெறும் ட்ராபிக் ப்ராப்ளத்தை மட்டும் கவனிக்குமா அல்லது ரூட்கள் அதிக மாக்கப் படுவது, திருப்புவது, எக்ஸ்டென்ஷன் செய்வது போன்ற வைகளிலும் கருத்துக்களைக் கொடுக்கலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த அதிகாரம் கிடையாது.

மாநில போக்குவரத்துக் குழு

*420 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இம் மாநில போக்குவரத்து ஆலோசனைக் குழு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆ னில், எப்போது அமைக்கப்பட்டது ?

(உ) அதன் உறுப்பினர்கள் யார் யார் என்ற விவரம் சபை முன் வைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Committee has been reconstituted in January 1963.

(*c*) A statement[a] is placed on the table of the House.

திரு. து. ப. அழகமுத்து : சார், இதற்கு உறுப்பினர்களைப் போடுவதில் மாவட்ட வாரியாக பிரதிநிதித்துவம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி பிரதிநிதித்துவம் இல்லை. நம்முடைய மேல் சபைக்கு சில பிரதிநிதிகள், இந்த மன்றத் திற்கு சில பிரதிநிதிகள், மோட்டார் ட்ரான்ஸ்போர்ட் வைத்திருக் கிறவர்களுக்கு பிரதிநிதித்துவம், தொழிலாளிகளுக்குச் சில பிரதி நிதிகள், லாரி ஓனர்களுக்கு சில பிரதிநிதிகள் என்ற அளவில் இருக்கிறது.

டாக்டர் பா. நடராஜன் : ஸார், கன்யாகுமரி மாவட்டத்திற்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாது என்று ஏதாவது இருக் கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கன்யாகுமரி மாவட்டத்தில் நான் சொன்ன கிளாசிபிகேஷனில் யாரும் வராமல் போய்விட்டார் களோ என்னவோ தெரியாது.

SRI V. S. S. MANI : May I know the functions of the State Transport Advisory Committee?

THE HON. SRI R. VENKATARAMAN : The State Transport Advisory Committee advises the Government on all transport problems relating to the running of buses and lorries, issue of licences, opening of routes, administration of Motor Vehicles Act and so on.

---

[a] Printed as Appendix II on pages 111–115